நகராட்சியிலுள்ள பொதுச் சுகாதாரத்துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ்கொண்டுவரும் திட்டம்.

*வினா எண் 50—திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சியிலுள்ள மற்றதுறைகளை நகராட்சி நிர்வாகத்துடன் இணைத்ததுபோல், நகராட்சியிலுள்ள பொது சுகாதாரத் துறையினையும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் கீழ் கொண்டு வரும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

வருஷநாட்டையும்—வத்திராயிருப்பையும் இணைக்கும் வகையில் சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 51—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் வட்டத்திலுள்ள வருஷ நாட்டையும் ஸ்ரீவில்லி புத்தூர் வட்டத்திலுள்ள வத்திராயிருப்பையும் இணைக்கின்ற வகையில் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இப்பணியை 1982-83 ஆம் ஆண்டு மலைச் சாலைகள் திட்டத்தில் மேற்கொள்ள பரிசீலனை செய்யப்பட்டது. போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக இப்பணியை இவ்வாண்டில் மேற்கொள்ள இயல வில்லை.

பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனித்து வரும் மண்டல இயக்குநர்கள்.

*வினா எண் 52—திரு. செ. செம்மலை: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பை கவனித்து வரும் மண்டல இயக்குநர்களின் எல்லை குறைந்தது இரண்டு மாவட்டங்களாக இருப்பதால் பேரூராட்சிகளின் அலுவல்களைத் திறம்பட கண்காணிக்க முடிவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலரை நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலர் கோட்ட வளர்ச்சி அலுவலர் நிலையில் நியமிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டம் நீட்டிக்கப்படுகிற நிலையில் அந்தப் பணிகளைச் செய்யவும் திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்யவும் ஒன்றியப் பொறியாளர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே பேரூராட்சிகளுக்கு தனியாக பொறியாளர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன்: தமிழகத்திலே இதுவரை தனி அதிகாரிகள் எத்தனை பேர்கள் நகராட்சியின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அந்த அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டு இருக்கின்ற அதிகாரங்கள் அவைகளை முன்னேற்றுவதற்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே' 15 பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உள்ள அதிகார வரம்புகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை யெல்லாம் படித்தால் அதிக நேரமாகிவிடும். ஆகவே தனியாக வந்தால் அவர்களிடம் தெரிவிக்கலாம்.

மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை மருத்துவ சோதனை செய்யும் திட்டம்.

*வினா எண். 53—திரு. சி. கோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரசின் சார்பில் நடத்தப்படும் மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களை மாதத்திற்கு ஒரு முறை சோதனை செய்ய ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவர்கள் பணிக்கப் படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: ஆதி திராவிட நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை அந்தந்த இடங்களில் உள்ள மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரிகள் மாதம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS